**O.S.No. 104/2015**

**Dated 08.04.2025**

**வா.சா.5 ஆவுடைக்கோமதி**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை. என்னுடைய பெயர் இருப்பிட முகவரியை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. வாதி முத்தம்மாள் என்பவருக்கு பூர்வீக ஊர் புளியங்குடி சிந்தாமணி என்றால் சரிதான். மேற்படி முத்தம்மாள் எங்கள் ஊருக்கு வந்து 25 வருடங்கள் இருக்கும். மேற்படி வாதி எனக்கு உறவினர் கிடையாது. வாதியின் முந்தைய வாழ்க்கை குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வாதியின் குடும்ப பின்னனி குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு தெரியும். கோபாலகிருஷ்ணநாடாருக்கு ஏற்கனவே திருமணம் ஆகி மனைவி இருக்கிறார் என்றால் சரிதான். மேற்படி கோபாலகிருஷ்ணநாடாருக்கும் பஞ்சவர்ணத்திற்கும் பிறந்த மகள் தான் முருகேஸ்வரி என்றால் சரிதான். எனக்கும் 1 முதல் 4 பிரதிவாதிகள் குடும்பத்திற்கும் இடையே சுக துக்க நிகழ்வுகளுக்கு நான் போய் வந்தது கிடையாது என்றால் சரிதான். எனக்கும் கோபாலகிருஷ்ண நாடாருக்கும் எந்தவொரு அறிமுகமும் கிடையாது என்றாலும் பேச்சுவார்த்தையும் கிடையாது என்றாலும் சரியல்ல. எங்கள் குடும்பத்திற்கும் பிரதிவாதிகள் குடும்பத்திற்கும் யாதொரு காலத்திலும் பேச்சுவார்தை கிடையாது என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதற்கு விவரம் குறித்து வழக்கறிஞரிடம் எதுவும் கூறவில்லை என்றால் சரிதான். நானும் வாதியும் ஒரே பீடி கம்பெனியில் பீடி சுற்றி வருகிறோம் என்றால் சரிதான். உங்களுக்குள்ள பழக்க வழக்கத்தின் அடிப்படையில் நடக்காத நிகழ்விற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் கோபாலகிருஷ்ண நாடாரின் பழக்க வழக்கங்கள் திருமண உறவுகள் குறித்து தெரியாது என்றால் சரியல்ல. எனக்கு திருமலாபுரம் கிராமத்தில் குடியிருப்பு கிடையாது என்றால் சரியல்ல. நான் பிறந்த ஊர் கலங்கல் என்ற கிராமம் என்றால் சரிதான். நான் எனது கணவருடன் கலங்கள் கிராமத்தில் வசித்து வருகீறேன் என்றால் சரியல்ல.

நான் திருமலாபுரம் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவர் என்பது தவறு என்றால் சரிதான். வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மவி இல்லை.**

**O.S.No. 104/2015**

**Dated 08.04.2025**

**வா.சா.6 சாமிக்காளை**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கும் நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம்அளிக்க அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதற்கு யாரிடமும் விவரங்கள் கூறி மனு அளிக்கவில்லை என்றால் சரிதான். நான் கோனார் சமுதாயத்தை சார்ந்தவர் என்றால் சரிதான். பிரதிவாதிகள் நாடார் சமுதாயத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். நாடார் சமுதாயத்தில் அவர்களின் நிர்வாகம் தனி என்றால் சரிதான். அதுபோல் கிருஸ்துவ நாடார் நிர்வாகம் தனி என்றால் சரிதான். இந்து நாடாருக்கும், கிருஸ்துவ நாடாருக்கும் நிர்வாகம் தொடர்பாக பகை உள்ளது என்றால் சரிதான். கோபாலகிருஷ்ண நாடாரின் திருமண வாழ்க்கை சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, அவரின் குடும்ப விவரங்கள் என்ன என்ற விவரம் குறித்து தெரியாது என்றால் சரிதான். பக்கத்துவீட்டுகாரரர் என்பதால் எனக்கு தெரியும். மேற்படி கோபாலகிருஷ்ண நாடாரின் பஞ்சவர்ணத்துடன் நடந்த திருமணம் நீதிமன்றம் மூலம் விவாகரத்து ஆனதா அவர்களின் திருமண விவரம் என்ன ஆனது என்பது குறித்து தெரியாது என்றால் சரிதான். திருமலாபுரம் இந்து நாடார் சமுதாயத்தில் திருமணம் நடந்ததற்கும், இறப்பு நடந்ததற்கும் ஊர் பணங்கள் கொடுக்கிற நடைமுறை உண்டு என்றால் சரிதான். அந்த நடவடிக்கைகளில் வாதி, பிரதிவாதிகளின் விவரம் குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதிக்கு அழைத்ததின் பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன். மற்ற விவரங்கள் குறித்து எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எனக்கு மனைவியும் மகனும் இல்லை என்றால் சரிதான். நான் தனியாக வசித்து வருகிறேன் என்றால் சரிதான். வாதி எனக்கு அனுசரணையாக இருந்து வருவதால் எனக்கு ஆதரவாகவும் இருந்து வருவதால் நான் அவர் கேட்டுக்கொண்டதின் பேரில் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**ம.வி இல்லை.**

**O.S.No. 104/2015**

**Dated 08.04.2025**

**வா.சா.7 சந்தியாகப்பன்**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய பெயர், இருப்பிட விவரம் காண்பிப்பதற்காக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதியின் கணவர் எனக்கு உறவினர் என்பதை காட்டுவதற்கு யாதொரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆரோக்கியம் உங்கள் ஊரில் உங்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் காரணமாக அவர் தனியாக சிந்தாமணி கிராமத்தில் குடியிருந்தார் என்றால் சரிதான். ஆரோக்கியத்தின் இறப்பிற்கும் நிகழ்வுகளுக்கு செல்லவில்லை என்றால் சரிதான். அதுகுறித்து எனக்கு தெரியும். கோபாலகிருஷ்ண நாடாரின் குடும்பம் பற்றியும், உறவு முறை பற்றியும், முந்தைய மனைவி பஞ்சவர்ணத்துடன் திருமணம் நடந்து மகள் முருகேஸ்வரி உள்ள விவரம் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதியின் திருமணத்தை நான் இருந்து முன்னின்று நடத்தவில்லை, நான் திருமணத்திற்கு செல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய முதல் நிலை சாட்சிய விவரங்கள் அனைத்தும் தவறானது என்றால் சரியல்ல. எனக்கு வாடியூர் கிராமம் இல்லை என்றும், வாதியின் உறவினர் கிடையாது என்றால் சரியல்ல.

ம.வி இல்லை.